# ஆண்டுகள் கோடி வாழ்க!

கங்கையும் பாய வில்லை!
காவேரிப் பெருக்கம் இல்லை!
எங்கிலும் பசுமை கண்டேன்!
இயற்கையின் எழிலைக் கண்டேன்!
குற்றால அருவி இல்லை!
குளிர்கொடைக் கானல் இல்லை!
வற்றாத மழையைக் கண்டேன்!
வாசனைத் தென்றல் கண்டேன்!

மதுரையின் சங்கம் இல்லை!
மாகவி கம்பன் இல்லை!
மதுரமாய்த் தமிழைக் கண்டேன்!
மாசிலா ஒழுக்கம் கண்டேன்!
தங்கவயல் கோலார் இல்லை!
தஞ்சையின் மண்ணும் இல்லை!
அங்காடி வரிசை கண்டேன்!
அத்தனை பொருளும் கண்டேன்!

அகத்தியர் போற்ற வில்லை!
ஔவையும் பாட வில்லை!
அகமகிழ் மக்கள் கண்டேன்!
அறவழி நடக்கக் கண்டேன்!
மெய்ஞ ன அடியார் இல்லை!
முனிவனின் வேள்வி இல்லை!
விஞ்ஞ னம் வளரக் கண்டேன்!
வர்த்தகம் செழிக்கக் கண்டேன்!

இந்திர உலகம் இல்லை!
இயலாமை எதிலும் இல்லை!
வந்தவர் வாழ்த்தக் கண்டேன்!
வையத்துச் சுவர்கம் கண்டேன்!
புத்தனும் பிறக்க வில்லை!
புகழ்மிகு காந்தி இல்லை!
உத்தமர் லீ குவான்யூ
உயர்த்திய சிங்கை கண்டேன்!

கண்டவை மாயம் இல்லை!
கற்பனைக் கவிதை இல்லை!
எண்டிசை போற்றக் கண்டேன்!
ஏற்றமாய்ச் சிங்கை கண்டேன்!
விண்டவர் கண்ட தில்லை!
கண்டவர் விண்ட தில்லை!
ஆண்டவன் உறையும் சிங்கை!
ஆண்டுகள் கோடி வாழ்க!

========

# கடவுளைக் கண்டேன்!

கண்களை மூடிக் கருத்தொரு மித்துக்
கடவுளை வேண்டிக் கடுந்தவம் புரிந்தேன்!
என்தவம் மெச்சியே இறைவனும் தோன்றினான்!
வேண்டிய வரங்களைத் தந்திட விழைந்தான்!
உலகம் படைத்த உத்தமன் முன்னே
உடம்பும் உயிரும் ஒடுங்கியே பணிந்தேன்!
அலையும் மனத்தை அடக்கியே வணங்கி
அகமது விரும்பும் வரமது கேட்டேன்!

பொன்னும் வேண்டேன்! பொருளும் வேண்டேன்!
போதை ஏற்றிடும் புகழும் வேண்டேன்!
கண்ணுக் கினிய காட்சியும் வேண்டேன்!
கணக்கில் அடங்காச் செல்வமும் வேண்டேன்!
விண்ணை எட்டும் மாளிகை வேண்டேன்!
விலைமதிப் பில்லா நவநிதி வேண்டேன்!
வண்ணம் காட்டும் மலர்வனம் வேண்டேன்!
வளமை தந்திடும் வாணிபம் வேண்டேன்!

எண்ணற்கரிய ஏவலர் வேண்டேன்!
ஏற்றம் தந்திடும் வாகனம் வேண்டேன்!
உண்பதற் கறுசுவைப் பண்டமும் வேண்டேன்!
உவந்து பேசிடும் உறவுகள் வேண்டேன்!
பண்ணும் வேண்டேன்! பாடலும் வேண்டேன்!
பட்டும் பலவிதப் பகட்டும் வேண்டேன்!
புண்ணியம் வேண்டேன்! பொருளும் வேண்டேன்!
பிறப்பே இல்லா மோட்சமும் வேண்டேன்!

பித்தனைப் போலவே வேண்டாம் என்றதும்
முத்தமிழ் போற்றும் முதல்வனும் திகைத்தே
'பக்தனே! உன்னால் பரவசம் அடைந்தேன்!
என்னதான் வேண்டும்? இயம்புக' என்றான்!
என்னைப் படைத்து எனக்குயிர் அளித்து
ஏணியாய் இருந்து மண்ணில் மறைந்த
அன்னை வேண்டும்! அவள்மடி வேண்டும்!
அன்பைப் பொழியும் அவள்மொழி வேண்டும்!

அன்னை வேண்டும்! பசித்திடும் வேளையில்
பரிந்தே ஊட்டும் அமுதம் வேண்டும்!
அன்னை வேண்டும்! அழுதிடும் பொழுது
ஆறுதல் தந்திடும் வார்த்தைகள் வேண்டும்!
அன்னை வேண்டும்! என்றும் வேண்டும்!
நாளும் பிரியா அவள்துணை வேண்டும்!
அன்னை வேண்டும்! அள்ளி வழங்கிடும்
அன்பும் ஆசியும் அனுதினம் வேண்டும்!'

விலைமதிப பில்லா அன்னையைக் கேட்டதும்
உலகத்து நாயகன் உயர்மொழி பகர்ந்தான்!
"நிற்பன பறப்பன ஊர்வன வென்றே
பற்பல உயிர்களைப் படைத்தேன்! களைத்தேன்!
அற்புத வாழ்வின் அருமையை உணரா
அற்ப மனிதரின் போக்கில் சலித்தேன்!
பற்றுதல் இல்லாப் பரம்பொருள் தேடிப்
பறந்து வந்தவுன் அன்னையைக் கண்டேன்!

எந்தன் திருவடிச் சேவைகள் செய்திட
அருட்கரம் நீட்டி அடைக்கலம் தந்தேன்!
அன்னையின் அன்பில் ஆறுதல் அடைந்தே
அலுப்பும் களைப்பும் அகன்றிடக் கண்டேன்!
இந்தப் பிறவியில் கொடுப்பினை இல்லை
இனியொரு பிறவி எடுத்திடும் பொழுது
எந்தன் அன்னையைத் தருவேன்" என்று
இனிதாய்ச் சொல்லி இறைவன் மறைந்தான்!

=========

# நல்லாசிரியன்

பட்டப் படிப்பைத் தொடர நினைத்துச்
சட்டம் படிக்கத் தீர்மா னித்தேன்!
கிட்டவே சென்று துடிப்பாய்ச் சொன்னதும்
சட்டென வேண்டா மென்றார் அப்பா!

"கூட்டிக் கழித்துக் கூச்சல் போட்டு
நீட்டி முழக்கி வாதம் செய்யும்
சட்டம் படித்தால் சடுதியில் பணம்வரும்!
பட்டவர் பழியுடன் பாவமும் உடன்வரும்!"

முடிவை மாற்றி மக்களைக் காக்கும்
படிப்பாம் மருத்துவம் பயின்றிட வேண்டித்
திடமுடன் தந்தையின் அனுமதி கேட்டேன்!
படபட வென்றே வேண்டா மென்றார்!

"மருத்துவம் என்பது மனிதரைக் காக்கும்
மகத்துவம் பெற்ற மாபெரும் நற்பணி!
பெயரும் புகழும் அடைந்தால் மட்டுமே
நயமுடன் நன்மையையும் பெயரும் சேரும்!"

விரும்பிய படிப்பைத் தொடர்ந்திட இயலா
திருப்பதும் 'விதி'யென நெஞ்சம் கனத்துச்
சுருங்கிய முகத்துடன் சோர்ந்தே போனேன்!
அருமையாய் அறிவுரை அழகாய்ச் சொன்னார்.....

“உலகில் புகழும் பொருளும் தந்திடும்
அளவிற் கரிய படிப்புகள் ஆயிரம்!
விளங்கும் எதிலும் முதலாய் வருவது
விளக்காய் அறிவைப் புகட்டும் கல்வியே!

பல்வகைப் பாடமும் பயிற்சியும் அளித்துக்
கல்வியும் பண்பும் ஒழுக்கமும் புகட்டி
நல்லவை சொல்லி அல்லவை நீக்கும்
நல்லா சிரியரின் நற்பணி சிறப்பே!

கற்றுளி கொண்டு கருங்கல் செதுக்கி
அற்புதச் சிலைகள் வடிப்பவன் சிற்பியே!
கற்றிடச் செய்து கசடற விளக்கிப்
பற்பல பயிற்றிடும் குருவும் சிற்பியே!

எழுத்தறி விப்பவன் இறைவன் என்றே
அழுத்தம் திருத்தமாய் அப்பா சொன்னதும்
விழிகளைப் பெற்ற அந்தகன் போல
முழுமன தோடு முடிவுக்கு வந்தேன்!

தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை
என்பதை உடனே செவிமேற் கொண்டேன்!
அன்புடன் அறிவைச் சிந்தையில் புகுத்தும்
இன்புறு ஆசான் படிப்பினைத் தொடர்ந்தேன்!

========

# பெண்மை என்பது

## யாதெனில்...?

உயிர்தந்து ஊண்தந்து உவகைதந்து
ஓருயிராய் ஈருடலாய்ச் சங்கமித்து
அயர்கின்ற போதெல்லாம் அன்புகாட்டி
அரவணைத்துக் காப்பதுதான் பெண்மையாகும்!

கண்ணின் மணிஎன்று கொஞ்சிப்பேசிக்
கலையாத கனவென்று நெஞ்சில்பூட்டிப்
பொன்னாக மணியாகக் கற்பைக்காக்கும்
புதுவயிர அணிகலன்தான் பெண்மையாகும்!

சுடுதணலாய்ச் சுடுகின்ற ஏச்சும் பேச்சும்
சுற்றமெலாம் சுமத்துகின்ற குற்றச்சாட்டும்
விடுக்கின்ற பெருமூச்சில் விரைந்தேயோடும்!
வித்தையினைக் கொண்டதுதான் பெண்மையாகும்!

சீறிவந் துளம்வாட்டும் துயரம்போகச்
சீரிளமைத் திறங்கொண்ட சிந்தையோடு
பேரிடர்கள் வந்தாலும் பொறுமைகாத்துப்
புன்னகைத்து மணப்பதுதான் பெண்மையாகும்!

நரைகண்டு மூப்புடனே நலனும்கெட்டு
நாடியும் தளர்ந்துடல் நலிந்தபோதும்
கரைகாணாப் பேரன்பால் கட்டிப்போட்டுக்
காதலுடன் வாழ்வதுதான் பெண்மையாகும்!

கண்ணகியும் காரைக்கால் அம்மையாரும்
கற்புநெறி தவறாத சீதைபோலும்
எண்ணற்ற மங்கையரின் பாதைசென்று
ஏற்றமுடன் வாழ்வதுதான் பெண்மையாகும்!

தமிழெந்தன் வேதமென்று தரணிஎங்கும்
தாயவளைக் கொண்டாடித் தினமும்வாழ்த்தி
அமிழ்தன்ன அறிஞர்களின் நூல்கள்காட்டும்

அறவழியில் நடப்பதுதான் பெண்மையாகும்!

==========

# அன்னை என் தெய்வம்!

அன்னை என்றால் அன்பெனும் வெள்ளம்
அகமும் புறமும் பெருகியே ஓடும்!
அன்னை என்றால் கருணையின் வடிவம்
கனிவைச் சிந்திடும் கார்முகிலாகும்!
அன்னை என்றால் அருள்ஒளி பரப்பும்
ஆதவன் போலொரு ஒளிவிளக்காகும்!
அன்னை என்றால் அனைத்து உயிர்களும்
உணர்ந்தே அழைக்கும் ஒலிஎன்றாகும்!

அன்னை என்றால் பசித்திடும் வேளையில்
பால்நினைந் தூட்டும் சுரபிஎன்றாகும்!
அன்னை என்றால் உடல்நலம் காக்கும்
மருத்துவர் போலொரு கடவுளென்றாகும்!
அன்னை என்றால் அழுதிடும் பொழுது
ஆறுதல் தந்திடும் தோழமையாகும்!
அன்னை என்றால் அறிவைப் புகட்டி
உயரே வைத்திடும் ஏணிஎன்றாகும்!

அன்னை என்றால் அனைத்தையும் தாங்கும்
பூமியைப் போலப் பொறுமைஎன்றாகும்!
அன்னை என்றால் இதமோடு அணைத்து
என்றும் காத்திடும் எளிமைஎன்றாகும்!
அன்னை என்றால் தன்னுயிர் பொருளுடன்
எதையும் தந்திடும் தியாகமென்றாகும்!
அன்னை என்றால் வையகம் போற்றிடும்
ஆதியாம் சக்தியின் அருள்வடிவாகும்!

===========